www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

மலர் : 6 | இதழ் : 5 | பிப்ரவரி : 2026 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ.15/-

Volume : 6 | Issue : 5 | February : 2026 | Tamil Monthly Mgazine | Price : Rs. 15/-



தஞ்சை மண்ணிற்கு பெருமை சேர்த்த நமது வீரமங்கை S.I.R.பணிக்கு தேசிய விருது..



முயற்சியின் மகத்துவம் பட்டுக்கோட்டை தாசில்தார்




சவாலான ஆபரேஷன் சாதனை படைத்த ஸ்டான்லி அரசு மருத்துவமனை டாக்டர் குழு



20 ஆண்டு பகை' - என்கவுன்டரில் கொல்லப்பட்ட அழகுராஜா யார்? திருச்சி ஐஜி. பாலகிருஷ்ணன் விளக்கம்...



SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com




SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Liquid Laundry Detergent
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

**ஆசிரியர் வெளியீட்டாளர்**
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
**J.கணேசபாண்டி, A.விஜய்,**
**G.ஜெயபிரகாஷ்நாராயணன்**

துணை ஆசிரியர்கள்
**D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,**
**B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,**

கௌரவ ஆலோசகர்கள்
**A.கந்தசாமி. S.P.**
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
**சுபாஷ் சந்திரபோஸ்**
காவல் துண கண்காணிப்பாளர் (ஓய்வு)
**Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,**
**மா.செல்வராஜ்**
(முன்னாள் முதல்வர் - குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
**சோம்புராஜன்**
கூடுதல்ஆணையர் தொழிலாளர்துறை (ஓய்வு)
**டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.**

முதன்மை நிருபர்கள்
**M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார்,**
**V.மாதவன்,**

நிருபர்கள்
**R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின்,**
**C.சரவணன், S.சஞ்சய்குமார், A.மதிமாறன்,**
**J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக்,P.சாலமன்,**
**P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்**

சட்ட ஆலோசகர்கள்
**K.M.S.செந்தில்குமார்.BSc., B.L.,**
**S.சரவணன்.M.Sc., B.L.,**
**A.வீரவாகன்.BSc., M.A., M.B.M., LL.B.,**

வடிவமைப்பு : **மகாராஜா பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 42.

nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.



# மனிதனுடைய மனோ சக்தி

உலகத்தில் எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாத சக்தி ஒன்று உள்ளது. அதுதான் மனிதனுடைய மனோ சக்தி என்பார், அறிஞர் கார்லைல்.

சக்தி என் பதற்கு ஆற்றல் என்றும் பொருள் கொள்ளலாம். இந்த ஆற்றலின் இருப்பிடமே இளமைதான். அதைச் சரியான தடத்தில் ஒருமுகப்படுத்தும் போது வெற்றி கிடைக்கும்.

சின்னவயதில் செய்து பார்த்த சோதனைஒன்று. ஒருவேளை நீங்களும்அதைச் செய்திருக்கலாம். நினைவுக் குளத்தில் நீந்திப் பாருங்கள். சுட்டெரிக்கும் கோடைகாலம். இலைகள் சருகுகளாகிபூமியின் மடியில்மடிந்து கிடக்கின்றன. அப்போது எந்தச் சருகும் தீயில் கருகவில்லை. கண்ணாடி லென்ஸ் ஒன்றை எடுத்துசூரியனின் கதிர்களை காய்ந்திருந்த சருகுகளின்மீது ஒரு புள்ளியாய்க் குவியுங்கள். சில நிமிடங்களில் புகை வந்தது. நெருப்பும் பற்றிக் கொண்டது.

எப்படி இது நிகழ்ந்தது... மாயத்தாலா... மந்திரத்தாலா... லென்சின் வழியாக சூரியக் கதிர்களை ஒருமுகப்படுத்தியதால் தான் நெருப்பு என்ற சக்தி வெளிப்பட்டது. இளைஞர்களே! இதுபோல் உங்களுடைய அலையும் மனசை அலைய விடாமல் ஒரு முகப்படுத்துங்கள். அபாரமான ஆற்றல் உங்களுக்குள்ளிருந்தும் வெளிப்படும்.

அதை வெற்றிஎன்னும் மையப் புள்ளியைநோக்கிக்குவியுங்கள். நீங்கள்தான் சாதனையாளர்கள்.

**ஆசிரியர் வெளியீட்டாளர்**
**R.சிவகுமார்**





# தஞ்சை மண்ணிற்கு பெருமை சேர்த்த நமது வீரமங்கை S.I.R.பணிக்கு தேசிய விருது..

**இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முக்கியமான நிர்வாகப் பணிகளில் ஒன்றான Special Intensive Revision (S.I.R.) செயல்முறையை திறம்படவும், காலக்கெடுவுக்குள் முழுமையாகவும் நிறைவேற்றியதற்காக, தஞ்சை மாவட்ட ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் அவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் கரங்களால் தேசிய அளவிலான விருது வழங்கப்பட்டுள்ளது.**

வாக்காளர் பட்டியலின் துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஜனநாயகத்தின் அடிப்படை என்பதால், S.I.R. பணிகள் மிகுந்த பொறுப்புடனும் கவனத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டியவை. வாக்காளர் விவரங்கள் சரிபார்ப்பு, கள ஆய்வு, புகார்கள் பரிசீலனை, அரசியல் கட்சிகளுடன் ஒருங்கிணைப்பு, அலுவலர்களின் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் ஒரே நேரத்தில் செயல்பட வேண்டிய சவாலான சூழ்நிலையில், தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பணிகள் முன்மாதிரியாக மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் செயல்முறையில், மாவட்ட நிர்வாகம் முழுமையான ஒருங்கிணைப்புடன் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. மாவட்ட ஆட்சியரின் தலைமையில், வருவாய், தேர்தல், உள்ளாட்சித் துறை அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் அனைவரும் ஒரே இலக்குடன் செயல்பட்டு, தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முழுமையாக நடைமுறைப்படுத்தினர். குழு பணிக்கே முதன்மை அளித்த நிர்வாக அணுகுமுறை, பணியின் தரத்தையும் வேகத்தையும் உறுதி செய்தது.S.I.R. பணிகளை நிறைவேற்றும் காலகட்டத்தில் எழுந்த விமர்சனங்கள் மற்றும் நிர்வாக அழுத்தங்களை மாவட்ட நிர்வாகம் உறுதியுடனும் சமநிலையுடனும் எதிர்கொண்டது. சவால்களை தடைகளாக அல்ல, மேம்பாட்டுக்கான வாய்ப்புகளாக மாற்றிய செயல்திறனே இந்த தேசிய அங்கீகாரத்திற்கு வழிவகுத்தது.

இந்த விருது, தனிப்பட்ட சாதனையாக மட்டுமல்லாமல், தஞ்சை மாவட்ட நிர்வாகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனுக்கும் கிடைத்த அங்கீகாரமாக பார்க்கப்படுகிறது. குடியரசுத் தலைவர் வழங்கிய இந்தப் பாராட்டு, தஞ்சை மாவட்டத்தை தேசிய நிர்வாக மேடையில் முன்னிறுத்தியுள்ளது.

திறமையான தலைமை, கூட்டு முயற்சி மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் செயல்பட்ட இந்த நிர்வாக மாதிரி, எதிர்காலத்திலும் பிற மாவட்டங்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தஞ்சை மாவட்ட மக்கள், இந்தச் சாதனையை பெருமையுடன் ஏற்றுக் கொண்டு, மாவட்ட நிர்வாகத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். நீதியின் நுண்ணறிவு குழுமம் சார்பாகவும் ஆட்சியர் அவர்களுக்கு வாழ்த்துகள்.




நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கூடலூர் தீயணைப்பு நிலைய தீயணைப்பாளர்கள் திரு.ரமேஷ், திரு,சுரேஷ் மற்றும் தீயணைப்பு வாகன ஓட்டுநர் திரு. சங்கர் ஆகியோருக்கு வீரதீர செயல் புரிந்தமைக்காக குடியரசு தின விழாவில் வழங்கப்பட்ட அண்ணா பதக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமிபவ்யாதண்ணீரு.இ.ஆ.ப., அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.




நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கோத்தகிரி வட்டம் சக்கத்தா கிராமத்தை சேர்ந்த செல்வி சொப்பனா என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை ரூ.50,000/- பெவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு. இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறையின் சார்பில், போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு. இ.ஆ.ப., அவர்கள், தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

# பொதுமக்களின் மனுக்களுக்கு முதல்வரின் தனிபிரிவு நடவடிக்கை எடுக்காமல் மௌனம் காப்பது ஏன்?

**தமிழ்நாடு அரசின் முக்கியமான புகார் தீர்வு அமைப்பாகக் கருதப்படும் முதல்வர் செல் (CM Cell) பொதுமக்களின் குறைகளை விரைவாகத் தீர்க்க உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த அமைப்புக்கு அனுப்பப்படும் பல மனுக்களுக்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுந்து வருகின்றன. இதனை சுட்டிக்காட்டும் வகையில், சமூக ஊடகங்களில் பதிவுகள் வெளியாகி தற்போது கவனம் பெற்றுள்ளது.**

பொதுமக்கள் தங்கள் அடிப்படை தேவைகள் மற்றும் நீண்டகால பிரச்சினைகள் குறித்து முதல்வர் செலுக்கு மனுக்கள் அனுப்பினாலும், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டதாகக் காட்டி முடித்து விடப்படுவதாகவும், அதன் பிறகு எந்தத் தீர்வும் கிடைப்பதில்லை என்றும் பரவலாக கூறப்படுகிறது. மனுக்களின் நிலை குறித்து விசாரித்தால், நடவடிக்கையில் உள்ளது அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கு மாற்றப்பட்டுள்ளது என்ற பதில்களே தொடர்ச்சியாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள சாலை வசதி, குடிநீர் பிரச்சினை, நிலம் தொடர்பான தகராறுகள், அரசு அலுவலகங்களில் நடைபெறும் தாமதங்கள் போன்றவை குறித்து மனுக்கள் அளிக்கப்பட்டாலும், பல மாதங்கள் கடந்தும் தீர்வு கிடைக்காத நிலை இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் மக்கள் நம்பிக்கையுடன் அணுகும் முதல்வர் செல் அமைப்பின் செயல்திறன் குறித்து கேள்விகள் எழுகின்றன.

முதல்வர் செலுக்கு அனுப்பப்படும் மனுக்கள் வெறும் கணக்கெடுப்பு எண்ணிக்கைகளாக மட்டுமே மாறிவிட்டனவா என்ற சந்தேகத்தையும் முன்வைக்கின்றனர். மனுக்கள் அனுப்பப்பட்டதாக பதிவு எண் வழங்கப்பட்டாலும், அதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் கலத்தில் அமல்படுத்தப்படுகிறதா என்பது தான் பதில் தெரியாத முக்கியமான கேள்வி. ஒரு புகார் தீர்வு அமைப்பு வெற்றிகரமாக இயங்க வேண்டுமெனில், மனுக்களைப் பெற்றதுடன் நிறுத்தாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பொறுப்புணர்வை விதித்து, காலக்கெடுவுக்குள் தீர்வு காண்பதே அவசியம் என சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இல்லையெனில், பொதுமக்களின் நம்பிக்கை குறைந்து, அரசு அமைப்புகளின் மீதான மதிப்பும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்த நிலையில், முதல்வர் செல் மூலம் பெறப்படும் மனுக்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன, எத்தனை மனுக்கள் தீர்வு பெற்றுள்ளன, எத்தனை மனுக்கள் இன்னும் நிலுவையில் உள்ளன என்பதைக் குறித்து வெளிப்படையான தகவல்கள் வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. மனுக்கள் மீது உண்மையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்விக்கு அதிகாரிகள் பதிலளிக்கும் காலம் இது என பொதுமக்கள் எதிர்பார்ப்பு மட்டுமே மிஞ்சுமா அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமா? பொருந்திருந்து பார்ப்போம்...

# கண்காணிப்பு குழு உறுப்பினர் மற்றும் அதிகாரிள் ஆய்வு..





## குழந்தை தொழிலாளர்களை கொத்தடிமைகளாக அமர்த்தப்பட்டு உள்ளார்களா ?

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் தொழிலாளர் துறையின் சார்பில் பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூண்டு வரை உள்ள ஜவுளிக்கடை, நகைக்கடை, கார்ப்பரேசன் கடை எலக்ட்ரீசியன், மருந்துக்கடை, பழக்கடை போன்ற அனைத்து வகையான கடைகளையும் தொழிலாளர் துறையின் பட்டுக்கோட்டை உதவி ஆய்வாளர் வெ.ப.லாவண்யா தலைமையில் மாவட்ட கொத்தடிமை தொழிலாளர் கண்காணிப்புக்குழு உறுப்பினர் டாக்டர் டி.புனல்ரவி, மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலக தன்னார்வலர் தினேஷ்குமார் கொண்ட குழு அனைத்து கடைகளையும் ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வின்போது கடைகளில் 18 வயதுக்கு உட்பட்ட குழந்தை மற்றும் வளரும் பருவ குழந்தைகள் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டு உள்ளார்களா என்றும், தொழிலாளர்களை கொத்தடிமைகளாக அமர்த்தப்பட்டு உள்ளார்களா என்றும் ஆய்வு செய்யப்பட்டது.

கடைகளில் அனைத்து தொழிலாளர்களின் சம்பளம் உட்பட அனைத்து வகையான பதிவேடுகளும் பராமரிக்க வேண்டும் எனவும் வடநாட்டு தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தும் போது ஆதார் கார்டு மற்றும் ஆதாரங்களோடு பதிவு செய்து பராமரிப்பதோடு அருகில் உள்ள காவல் நிலையத்தில் தகவலாக ஆதாரங்களை கொடுத்து பதிவு செய்ய வேண்டும் என்றும் அனைத்து கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியும், கடை உரிமையாளரிடம் 'எங்கள் கடையில் குழந்தை தொழிலாளர் வேலைக்கு அமர்த்தப்படவில்லை என்றும் தொழிலாளர் துறையின் உதவி ஆய்வாளர் பாலசந்தர் அலைபேசி எண் 9943993913'ஐ பதிவு செய்து தகவல் பலகை கடைக்கு முன்பு வைக்க வேண்டும் அறிவுரை என்றும் வழங்கப்பட்டது.




# 2026ஆம் ஆண்டின் தகைசால் விருது

2026ஆம் ஆண்டின் குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு காவல்துறையின் இந்திய குடியரசுத் தலைவரின் தகைசால் பணி மற்றும் மெச்சத்தக்க பணிக்கான விருது பெரும் முன்னால் கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் நேர்மையின் சிகரம், உயர் திரு.சரவண சுந்தர் இ.கா.ப., அவர்களுக்கு நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழின் சார்பாக வாழ்த்துக்கள்.




நாகப்பட்டினம் மாவட் காவல் கண்காளிப்பாளர் DR.K.S.பாலகிருஷ்ணன் அவர்களின் உத்தரவின் படி இரண்டு துணை கண்காணிப்பாளர்கள் தலைமையுல் 05 காவல் ஆய்வாளர்ள் மற்றும் 50 காவலர்கயை கொண்டு வேளாங்கண்ணி அனைத்து தங்கும் விடுதிகளில் அதிரடி சோதனை நடத்தப்ட்டது.

# திருப்பூர் வடக்கு காவல் நிலையத்திற்கு மாநில அளவிலான பாராட்டு



தமிழ்நாடு காவல்துறையின் சிறந்த காவல் நிலையங்களுக்கான மாநில அளவிலான தரவரிசையில், திருப்பூர் மாநகர வடக்கு காவல் நிலையம் இரண்டாவது இடம் பெற்று பெருமை சேர்த்துள்ளது. எண்ணித் துணிக கருமம் விடாமுயற்சி இன்று வெற்றியாக மாறியுள்ளது என்ற வாசகத்தை நிஜமாக்கும் வகையில், இந்த சாதனை காவல் துறையின் அர்ப்பணிப்பையும் ஒழுங்கையும் வெளிப்படுத்துகிறது.

திருப்பூர் மாநகரம் தொடர்ந்து நான்காவது முறையாக தமிழக முதல்வர் அவர்களின் சிறந்த காவல் நிலைய விருதைப் பெற்றுள்ளது. இதில், வடக்கு காவல் நிலையம் மட்டும் மூன்றாவது முறையாக இந்த உயரிய அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் பிரேமா அவர்கள், பெண்களுக்கெதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி வருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். பெண்களுக்கெதிரான குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு, குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுத் தந்ததன் மூலம், இந்த காவல் நிலையம் சிறந்த சாதனையைப் பதிவு செய்துள்ளது.

பெண்களும் புலப்பெயர் தொழிலாளர்களும் அதிகம் வசிக்கும் திருப்பூர் மாநகரத்தில், அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி, சட்ட ஒழுங்கை சிறந்த முறையில் பராமரித்து வருவது வடக்கு காவல் நிலையத்தின் தனித்த அடையாளமாக விளங்குகிறது.

இந்த வெற்றிக்காக திருப்பூர் மாநகர காவல்துறைக்கும், வடக்கு காவல் நிலையத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும் நீதியின் நுண்ணறிவு சார்பில் மனமார்ந்த வாழ்த்துகள்.

# தாட்கோ சிறப்பு கடன் பெற விண்ணப்பிக்கலாம்




**தாட்கோ மூலம் வழங்கப்படும் சிறப்பு கடன் வசதியைப் பெற ஆதிதிராவிடர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆதிதிராவிடர்களை தொழில்முனைவோராக மாற்றுவதற்கு மானியத்துடன் கூடிய கடன்களை வழங்குகிறது. முதல்வரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில் முனைவு திட்டத்தின்கீழ் 2025-26-இல் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,726 ஆண்கள், 1,226 மகளிர் என மொத்தம் 3,952 பயனாளிகளுக்கு புதுமையான திட்டங்களுக்கு ரூ.74.75 கோடி மானியத்துடன் கூடிய கடன் விடுவிக்கப்பட்டு சுய தொழில் செய்து வருகின்றனர். கடந்த ஆண்டுகளில் நான்கு சக்கர வாகனம் வாங்க (கனரக, இலகுரக) 1,203 பயனாளிகளுக்கு ரூ.37.12 கோடி, மூன்று சக்கர வாகனம் வாங்க 648 பயனாளிகளுக்கு ரூ.8.34 கோடி, மின்சாதன பொருள்கள் மற்றும் கட்டட பொருள்கள் தொழில் செய்ய 447 பயனாளிகளுக்கு ரூ.8.43 கோடி, கடைகள் (தையலகம், அழகு நிலையம், மளிகை, எழுதுபொருள்கள் நிலையம் மற்றும் பல) தொழில்கள் செய்ய 1,600 பயனாளிகளுக்கு ரூ.27.74 கோடி, பால்பண்ணை அமைத்தல் தொழில் செய்ய 566 பயனாளிகளுக்கு ரூ.3.18 கோடி, இதர தொழில்லுக்கு 223 பயனாளிகளுக்கு ரூ.4.94 கோடி என மொத்தம் 4,687 பயனாளிகளுக்கு ரூ.89.75 கோடி மானியத்துடன் கூடிய கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஆதிதிராவிடர் முன்னேற்ற திட்டம்: பிரதமரின் ஆதிதிராவிடர் முன்னேற்ற திட்டத்தின் கீழ் 2025-26 -இல் ரூ.66.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,666 ஆண்கள், 5,810 மகளிர் ஆக மொத்தம் 7,476 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் விடுவிக்கப்பட்டு சுய தொழில் செய்து வருகின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக மக்களின் வாழ்வாதாரத்தையும் தொழில் வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்கத்தில், 2025-26-இல் 1,189 பயனாளிகளுக்கு ரூ.7.39 கோடி, கடந்த ஆண்டுகளில் 1,408 பயனாளிகளுக்கு ரூ. 7.74 கோடி என மொத்தம் 2,596 பழங்குடியின பயனாளிகளுக்கு ரூ.15.13 கோடி சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டத்தில் 2025-26-இல் 162 பயனாளிகளுக்கு ரூ.1.62 கோடி கடந்த ஆண்டுகளில் 1,352 பயனாளிகளுக்கு ரூ. 12.73 கோடி என மொத்தம் 1,514 ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு ரூ.14.35 கோடி சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பொலிவு பராமரிப்பு பெட்டகம்: தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 60 மகளிர் சுய உதவிக் குழுவினரைக் கொண்டு சமூக நீதி விடுதியில், தங்கிப்பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு குளியல் சோப்பு, ஷாம்பு, எண்ணெய், சலவை தூள், சலவைசோப்பு உள்ளிட்ட ஏழு பொருள்கள் அடங்கிய பொலிவு பராமரிப்பு பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் தமிழ்நாடு அரசு சார்பில் ரூ. 75 கோடியும், மத்திய அரசு சார்பில் ரூ. 37 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த மாதமே முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு தனி கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வதாரத்தை மேன்மைப்படுத்த இந்த அரசு பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை மாவட்ட காவல் அலுவலகத்தில் சிறப்பு புத்தாக்க பயிற்சி





தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் அனைத்து காவலர்களுக்கும் சிறுகாய வழக்குகள், சந்தேக மரண வழக்குகள், சாலை விபத்து வழக்குகள் & மதுவிலக்கு குற்ற வழக்குகள் ஆகியவற்றில் விரைந்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்காக சிறப்பு புத்தாக்க பயிற்சி வழங்க உத்தரவிட்டுள்ளதன் பேரில் மதுரை மாவட்டத்தில் காவலர்களுக்கான 2 நாட்கள் புத்தாக்க பயிற்சி முகாம் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. B.K.அர்விந்த். IPS., அவர்களால் மதுரை மாவட்ட காவல் அலுவலகத்தில் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இப்பயிற்சியில் 50 காவலர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேலும், இப்பயிற்சி முகாமில் மதுரை சரக காவல் துணைத் தலைவர் Dr.அபினவ்குமார்.IPS., அவர்கள் கலந்து கொண்டு காவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். இப்பயிற்சி முகாமானது அனைத்து வாரங்களும் தொடர்ந்து நடைபெற உள்ளது.

---

# நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை









தமிழ்நாடு கூடுதல் காவல் தலைமை இயக்குனர் சட்ட மற்றும் ஒழுங்கு அவர்களின் அறிவுறுத்தலின்படி நாகப்பட்டினம் மாவட்ட காவலர்களுக்கான தொடர் மறு சீரமைப்பு பயிற்சி முகாம் (Refresher Training for the other Ranks ) (02.02.2026) அன்று தொடங்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.S.பாலகிருஷ்ணன் அவர்கள் காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களிடம் கண்ணியமாக நடப்பது மற்றும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து நேரடியாக பயிற்சி அளித்தார்கள். மேலும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.K.K.பாலச்சந்தர் மற்றும் Dr.ராம்குமார் விக்ரம் psychiatry department அரசு மருத்துவக் கல்லூரி ஒரத்தூர் ஆகியோரும் காவலர்கள் முதல் தலைமை காவலர்களுக்கு துறை ரீதியான புத்தாக்க பயிற்சிகளை வழங்கினார்கள்.



**77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் காவல் நிலையம் மாநிலத்தில் மூன்றாவது சிறந்த காவல் நிலையமாக தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (26.01.2026) அன்று சிறந்த காவல் நிலையம் என்ற விருதை வழங்கினார்.**

---

# சென்னை ஆஸ்பத்திரியுடன் இணைந்து 7 வயது சிறுமிக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை

## தஞ்சை டைனி ஹார்ட்ஸ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் சாதனை




குழந்தைகளுக்கு ஏற்படும் இதய நோய் குறித்து டைனி ஹார்ட்ஸ் மருத்துவமனையில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நிர்வாக இயக்குனர்கள் டாக்டர்கள் மணிராம் கிருஷ்ணா, உஷாநந்தினிமணிராம் மற்றும் டாக்டர்கள் கலந்து கொண்ட போது எடுத்தபடம்.



# முயற்சியின் மகத்துவம் பட்டுக்கோட்டை தாசில்தார் தர்மேந்திராவின் வாழ்க்கை வரலாறு

**ஒரு மனிதன் எந்த நிலையில் இருந்து எங்கு வந்து நிற்கிறான் என்பதற்கான உயிர்ப்பான எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் பட்டுக்கோட்டை தாசில்தார் திரு. தர்மேந்திரா அவர்கள். அதிகாரப் பதவி அவருக்கு அடையாளம் அல்ல; தளராத முயற்சி, தொடர் உழைப்பு, சமூக அக்கறை இவைதான் அவரது உண்மையான முகவரி.**

1998-ஆம் ஆண்டு எம்.எஸ்.சி., எம்.பில். பட்டங்களை முடித்த இளம் தர்மேந்திரா அவர்களுக்கு கனவு ஒன்றே ஒன்று சிவில் சர்வீஸ். அக்காலத்தில் UPSC,TNPSC போன்ற தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு மிகக் குறைவு. மிக உயர்ந்த கல்வித் திறன் உள்ளவர்களுக்கே இந்தத் தேர்வுகள் சாத்தியம் என்ற தவறான நம்பிக்கை சமூகத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த காலம் அது. அந்தச் சூழலில்தான், நூலகத்தில் தன்னார்வமாக மாணவர்களை வழிநடத்திய தமிழ் ஆசிரியர் ஆர்.தா. பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதல் தர்மேந்திரா அவர்களின் வாழ்க்கையில் முக்கியத் திருப்பமாக அமைந்தது. அந்தக் குருவின் சொற்களே, இந்தத் தேர்வுகள் எல்லோருக்கும் என்ற நம்பிக்கையை அவருக்குள் விதைத்தன.

UPSC,TNPSC தேர்வுகளை தொடர்ந்து எழுதினார். ஒருமுறைக்கு இருமுறை. முதன்மைத் தேர்வு (Mains) வரை சென்றார். ஆனால் இறுதிக் கட்ட வெற்றி கைகூடவில்லை. அதே நேரத்தில், வயது வரம்பும் அவரை விலக்கத் தொடங்கியது. அவருடன் படித்த நண்பர்கள் ஐந்து, ஆறு வயது இளையவர்கள் இன்னும் வாய்ப்புகளுடன் தேர்வுகளை எழுதிக் கொண்டிருந்தனர். அவர்களே இன்று இளம்பகவத் IAS, முத்தமிழ் காவல் கண்காணிப்பாளர் போன்ற உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள். அந்த கடினமான தருணத்தில், டாக்டர் ராம்மோகன் அவர்களின் ஆலோசனை வாழ்க்கைக்கு புதிய திசையைத் தந்தது. மயிலாடுதுறை AVC கல்லூரியில் ஆசிரியராகப் பணியமர்ந்தார். ஆனால் அதுவே அவரது பயணத்தின் முடிவாக இல்லை.UPSC கைவிட்டது; ஆனால் அரசு சேவை கனவை அல்ல என்ற மன உறுதியுடன், தேர்வுகளை தொடர்ந்து எழுதினார். 2008-ஆம் ஆண்டு, அவர் தனது முதல் அரசுப் பணியைப் பெற்றார் கிராம நிர்வாக அலுவலர் (VAO). பலருக்கு அது நிறைவாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் தர்மேந்திரா அவர்களுக்கு அது தொடக்கம் மட்டுமே. 2011-ஆம் ஆண்டு மாநில தலைமையகத்தில் நெடுஞ்சாலைத் துறையில் பணியமர்ந்தார். 2012-ஆம் ஆண்டு மீண்டும் தேர்வு எழுதி வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) பதவியைப் பெற்றார். அடுத்தடுத்த பதவி உயர்வுகள் தொடர்ச்சியான உழைப்பின் பலனாக அவரை இன்று தாசில்தார் என்ற உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

அவரது கல்வி சாதனையும் குறிப்பிடத்தக்கது. தன் சொந்த கிராமமான பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள அலிவளத்தில் முதல் மற்றும் ஒரே பிஎச்.டி. பட்டதாரி, மேலும் மாஸ்டர் பட்டம் பெற்ற இரண்டாவது நபர் என்ற பெருமையும் அவருக்கே. இந்தச் சாதனைகள் தனிப்பட்டவை அல்ல; ஒரு கிராமத்தின் கனவுகளுக்கான கதவுகளைத் திறந்தவை. வட்டாட்சியராக பொறுப்பேற்று முதலில் கொள்ளுக்காடு பகுதியில் உள்ள மூன்று தலைமுறையாக பட்டா இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை தொழிலாளி மக்களுக்கு பட்டா வழங்கியதோடு அவர்களுக்கு ஒரு நிரந்தர இருப்பிடத்தை ஏற்படுத்தி கொடுப்பதற்காக எடுத்த முயற்சிகள் கலைஞர் கனவு இல்லம் திட்டம் பெரிய அளவில் கை கொடுத்ததன் மூலம் அவர்களுக்கு இன்று ஒரு நிரந்தர குடியிருப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். மேலும் இதுபோன்று நடுவிக்குறிச்சி பகுதியில் எண்பது ஆண்டு காலமாக மயானம் இல்லாத சூழலில் அங்கு மயான கட்டிடம் உருவாக வழிவகை செய்ததோடு, துர்கா நகர் பகுதிகளில் வீடு இல்லாத பழங்குடியினர் மக்களுக்கு பட்டா ஏற்பாடு செய்து கொடுத்தது, நம்பிவயல் மற்றும் ஒட்டங்காடு பகுதிகளில் சாலையோரம் வசித்து வந்த பழங்குடியினர் மக்களுக்கு குடியிருப்பு ஏற்படுத்தி கொடுத்தது, தாய் தந்தையரை இழந்து ஆதரவற்று உறவினர்களின் உதவியை மட்டுமே நம்பி பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பெண்ணிற்கு மாவட்ட ஆட்சியரின் உதவியுடன் அவரின் தந்தையின் இடத்தை மீட்டு கொடுத்து அதில் அவருக்கென நிரந்தர வீட்டு வசதியை ஏற்பாடு செய்தது போன்ற தொடர் குறிப்பிடத்தக்க சிறப்பான பணிகளை மேற்கொண்டு இருப்பதோடு, போக்குவரத்து வசதி குறைவாக இருக்கும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு அரசு தேர்வுகளின் போது சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்வது போன்ற பல பாராட்டத்தக்க பணிகளை செய்து வருகிறார்.




சமீபத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகளை சிறப்பாகவும் விரைவாகவும் செய்து முடித்ததற்காக இந்திய அளவில் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் பாராட்டி விருது வழங்கினார். இந்த பணிகளில் வட்டாட்சிய திரு தர்மேந்திரா அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதால் தமிழகத்தில் இருந்து தஞ்சை மாவட்டம் சார்பாக மாவட்ட ஆட்சியர் உட்பட டெல்லி சென்ற மூன்று நபர்களில் வட்டாட்சியர் திரு தர்மேந்திரா அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மேந்திராவின் வாழ்க்கையில் ஒரு சிறுவயது நினைவு உள்ளது. அவரது தந்தை தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கல் கழகத்தில் தற்காலிக உதவியாளராகப் பணியாற்றியவர். ஒருநாள் தர்மேந்திரா அவர்களை அழைத்துக்கொண்டு தாசில்தார் அலுவலகத்துக்குச் சென்றார். அலுவலக வாயிலில் 45 நிமிடங்கள் காத்திருந்த பிறகே உள்ளே அனுமதி கிடைத்தது. அந்தத் தாசில்தார் குடியிருப்பில் இருந்த கூட்டமும் அவர்களின் பரபரப்பான செயல்களும், அதிகாரத்தின் கம்பீரமும், சிறுவயது மனதில் ஒரு தாசில்தார் என்பவர் ராஜாவைப் போன்றவர் என்ற பதியலை ஏற்படுத்தியது. ஆண்டுகள் கழித்து, அதே அலுவலகம், அதே நாற்காலி இன்று தர்மேந்திரா அவர்களுக்காக.

2025 ஆகஸ்ட் மாதம், பட்டுக்கோட்டை தாசில்தாராகப் பொறுப்பேற்ற தருணத்திலிருந்து, அவர் ஒரு நிறுத்தமற்ற இயந்திரம் போல செயல்படுகிறார். பொதுமக்கள் அணுக எளிதான நிர்வாகம், விரைவான தீர்வுகள், மனிதநேய அணுகுமுறை இவையால் அவர் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். அதிகாரம் அவரை உயர்த்தவில்லை; அவர் அதிகாரத்தை உயர்த்துகிறார்.

தர்மேந்திரா அவர்களின் பாதை சொல்லும் பாடம் தெளிவானது: தோல்வி முடிவு அல்ல; அது திசைமாற்றம். கனவுகள் மாறலாம், ஆனால் முயற்சி மாறக்கூடாது. இன்று அவர் ஒரு தாசில்தார். ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் ஊக்கமாகத் திகழும் ஒரு எடுத்துக்காட்டு. இவரது பணி மென்மேலும் சிறக்கவும், மேலும் பல உயரங்கள் எட்டவும் நீதியின் நுண்ணறிவு சார்பாக வாழ்த்துகள்.





# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய உடற்தகுதி தேர்வு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய இரண்டாம் நிலை காவலர், சிறை காவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிக்கான எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கான உடற்தகுதி தேர்வு திருச்சி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.வே.பாலகிருஷ்ணன், இ.கா.ப., அவர்களின் முன்னிலையில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



# லஞ்சம்வாங்கிய அரசு அலுவலர் கைது

திருவேற்காடு நகராட்சியில் காலி மனைக்கு அங்கீகாரம் வழங்க ரூ.10,000 லஞ்சம் வாங்கிய நகர அமைப்பு அலுவலர் சாந்தி என்பவர் கைது ஜெயலட்சுமி என்ற பெண் கொடுத்த புகாரின் அடிப்படையில் லஞ்சம் வாங்கிய சாந்தியை கைது செய்து லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி

# 15 வயது சிறுமிக்கு சவாலான ஆபரேஷன் செய்து சாதனை படைத்த ஸ்டான்லி அரசு மருத்துவமனை டாக்டர் குழு




**ஸ்டான்லி அரசு மருத்துவமனை வடசென்னை மக்களுக்கு மட்டுமல்ல பல்வேறு மாவட்டங்கள் மற்றும் பல்வேறு ஊர்களில் இருந்து இங்கு சிகிச்சைக்கு ஏழை எளியவர்கள் வந்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது**

இந்த மருத்துவமனையில் பல்வேறு மிகவும் சவாலான ஆபரேஷன் மற்றும் சிகிச்சைகள் இங்கு அளிக்கப்பட்டு பல்வேறு சாதனைகளுக்கு சொந்தம் கொண்டாடி வருகிறது இந்த ஸ்டான்லி அரசு மருத்துவமனை. அதைப்போல தற்போது டாக்டர்கள் தலைமையில் 15 வயது சிறுமிக்கு இருதய ஆபரேஷனை மிகவும் வித்தியாசமான முறையில் நுணுக்கமான முறையில் இந்த ஆபரேஷனை செய்து உள்ளனர். மேலும் இந்த ஆபரேஷன் முடிந்த அடுத்த நாளிலே சகஜமாக நடக்கத் தொடங்கியுள்ளார் அந்த சிறுமி. இந்த ஆபரேசன் பொது சுகாதாரத் துறையில் ஒரு முக்கியமான மைல்கல்லாக பார்க்கப்படுகின்றது

அந்த சிறுமிக்கு தமிழ்நாடு அரசின் முயற்சியின் கீழ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் (TNHSP) உடன் இணைந்து, ஸ்டான்லிஅரசு மருத்துவக் கல்லூரி, சென்னையில் சிறு துளை இதய அறுவைச் சிகிச்சை (Minimally invasive Heart surgery-MICS) முழுமையான எண்டோஸ்கோப்பிக் ஏட்ரியல் செப்டல் டிஃபெக்ட் (Total Endoscopic ASD closure) மூடல் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இது தமிழ்நாடு அரசு மருத்துவ நிறுவனங்களில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட முழுமையான எண்டோஸ்கோப்பிக் இதய அறுவைச் சிகிச்சை ஆகும். குறைந்த பொருளாதார பின்னணியிலிருந்து வந்த 15 வயதுடைய பெண் குழந்தை இந்த அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, சிறந்த அறுவைச் சிகிச்சை மூலம் மீண்டும் நலம் பெற்றார். அறுவைச் சிகிச்சை நடந்த அதே நாளில் (POD–0) வென்டிலேட்டர் உதவி இல்லாமல் இருந்தார். பின்னர் அடுத்த நாளில்




(POD–1) நடமாடத் தொடங்கினார். மேலும் அறுவை சிகிச்சை முடிந்து நான்காவது நாளில் மருத்துவமனையிலிருந்து நலமுடன் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்



மாநிலம் முழுவதும் பல அரசு மருத்துவ நிறுவனங்களில் குறைந்த காயம் இதய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இந்த அறுவைச் சிகிச்சை தமிழ்நாடு அரசு பொது சுகாதார அமைப்பில் முழுமையாக எண்டோஸ்கோப்பிக் சிறு துளை முறையில் மேற்கொள்ளப்பட்ட முதல் இதய அறுவைச் சிகிச்சை எனும் பெருமையை அரசு ஸ்டான்லி மருத்துவமனை பெற்றுள்ளது

இந்த அறுவைச் சிகிச்சை சர்வதேச அளவில் கவனம் பெற்று உள்ளது குறிப்பிடதக்கது. ஏனெனில் இது கொல்கத்தா, கிரீஸ் மற்றும் வியட்நாம் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ மையங்களுக்கு நேரடி ஒளிபரப்பாக (**Live Telecast**) வழங்கப்பட்டது. உலகின் பல பகுதிகளில் உள்ள இதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் இந்த அறுவைச் சிகிச்சையை மெய்நிகர் முறையில் பார்வையிட்டு கலந்து கொண்டனர். இதற்கு முன்பாக, இந்த முக்கிய முயற்சியைத் தொடங்கும் வகையில் தொடக்க விழா (**Inauguration Function**) சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் (**TNHSP**) திட்ட இயக்குநர், டாக்டர் வினீத். **IAS** முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார். டாக்டர் நந்தகுமார் **CTVS** , அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (**Chengalpattu Medical College &Hospital**) இன் மருத்துவ கண்காணிப்பாளர் (**Medical Superintendent** )சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்

இந்த விழா, டீன் டாக்டர் அரவிந்த், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஜோதிகுமார்,மற்றும் உறைவிட மருத்துவர் டாக்டர் வனிதாமலர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்களது ஆதரவு மற்றும் பங்கேற்பை வழங்கினர். இந்த அறுவைச் சிகிச்சையை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, சென்னையைச் சேர்ந்த டாக்டர் ரெஞ்சித் சிங் **CTVS** மற்றும் டாக்டர் காவியா **CTVS** ஆகியோர் மேற்கொண்டனர்.கோயம்புத்தூரில் உள்ள ராமகிருஷ்ணா மருத்துவமனையைச் சேர்ந்த **CTVS** நிபுணர் டாக்டர் ராம்பிரசாத் வழிகாட்டினார்.

அரசு மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, ஓமந்தூரார், கலைஞர் நூற்றாண்டு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கிண்டி ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து வந்த இதய அறுவை நிபுணர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டு, இந்த முன்னோடி முயற்சிக்கு பாராட்டும் ஆதரவையும் தெரிவித்தனர்

இந்த சாதனை, மேம்பட்ட குறைந்த காயம் இதய அறுவைச் சிகிச்சைகளை அரசு மருத்துவ நிறுவனங்கள் வழியாக பொதுமக்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றும் திசையில் ஒரு முக்கிய முன்னேற்றமாகும். இது போன்ற அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள 15 லட்சம் ரூபாய் வரை செலவு ஆகலாம். ஆனால் முதல்வரின் காப்பீடு திட்டத்தில் இலவசமாக செய்யப்பட்டது

பொது சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் முன்னணி இடத்தில் மீண்டும் நாங்கள் தான் என்றும், ஸ்டான்லி அரசு மருத்துவமனை தங்களை மீண்டும் ஒருமுறை சாதனையாளர்கள் என நிரூபித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

முதன்மை நிருபர்
**எம்.எஸ்.கே. பாரதி**






பொன்னமராவதி வலையபட்டியை சேர்ந்த மீனா என்பவர் தனது கைப்பையை தொலைத்து விட்டதாக மேற்படி பையில் இருந்த 10,500 பணத்தையும் பல அரசு ஆவணங்களையும் பத்திரமாக எடுத்து கொடுத்த பொன்னமராவதி பேரூராட்சியில் பணி செய்யும் சதீஷ்குமாரை பொன்னமராவதி காவல் உதவி ஆய்வாளர் சரவணன் பொன்னாடை அணிவித்து பாராட்டினார்..

# சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன் எழுதும் சிந்தனை தொடர்..

# அறம் செய்ய விரும்பு

**கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த குடியான தமிழ் மொழியில் ஏராளமான வாழ்வியல் சிந்தனைகள் அடங்கிய இலக்கிய பொக்கிஷங்கள், அறிவுப் புதையல்கள் காணப்படுகின்றன அதில் ஒன்றுதான் ஆத்திச்சூடி, ஆம் ஆத்திசூடி என்பது கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் இயற்றிய நீதி நூல் ஆகும். சிறுவர்கள் இளம் பருவத்திலேயே மனனம் செய்து மனதில் நிறுத்திக்கொள்ளும் வகையில் சிறுசிறு சொற்றொடர்களால் எளிமையாக அமைந்த இலக்கியச் செல்வமே ஆத்திசூடி ஆகும்.**

தமிழ்ச் சமுதாயம் நல்லொழுக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்ததை உணர்த்தும் விதமாகவும் அன்று வழக்கத்திலிருந்த திண்ணைப் பள்ளிகள், குருகுலங்கள் முதல், இன்று பின்பற்றப் படுகிற மெக்காலே கல்வி முறை வரை, தமிழ் கற்கும் போது தமிழின் உயிரெழுத்துகளைச் சொல்லித் தருகின்ற பொருட்டு ஔவையின் ஆத்திசூடியைக் கொண்டு கற்பிப்பதை ஆசிரியர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் எழுதிய ஆத்திசூடி என்கின்ற நீதி நூலில் கூறும் முதல் அறிவுரை 'அறம் செய்ய விரும்பு' என்பதாகும். மேற்காணும் சொற்றொடரானது ஒரு மனிதன் நற்செயல்கள் மற்றும் தருமங்களை மகிழ்ச்சியுடன், மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. தானம், ஈகை, நேர்மை மற்றும் பிறருக்கு உதவுதல் போன்ற அறநெறிகளை, கடமைக்காக செய்யாமல் விருப்பத்துடன் செய்வதன் மூலம், அந்தச் செயல்கள் தொடர்ந்து நம் வாழ்வில் நிலைத்து நிற்கும்.

அறம் செய்ய விரும்பு – அதாவது அறம் அல்லது நற்செயல்களை செய்ய வேண்டும் என்ற எண்ணம், ஆர்வம் அல்லது ஆசை கொண்டிருக்க வேண்டும் என்று ஔவையார் நம்மை நல்வழிப்படுத்துகிறார். மேலும் அறம் செய் என்று கட்டளையிடாமல், விரும்பிச் செய்யச் சொல்வது அதன் சிறப்பைக் காட்டுகிறது. விருப்பத்துடன் செய்வதால், அந்த நற்செயல் மீண்டும் மீண்டும் செய்யப்படும். அதோடு மட்டுமல்லாமல் இச்செயல், தர்மம் மற்றும் நேர்மையான வாழ்வை வலியுறுத்துகிறது. மனிதன் செய்கின்ற நற்செயல்கள் அனைத்தும் அறம் எனப்படும். பசித்தவருக்கு உணவிடுதல், பொய் சொல்லாமை, நேர்மை போன்றவை இதன் பொருளாகும். அறம் செய்வதன் மூலம் ஒருவன் தன்னை ஒழுக்கப்படுத்திக் கொள்ள முடியும். எனவே, ஒவ்வொரு மனிதனும் நல்ல செயல்களைச் செய்ய எப்போதும் விரும்ப வேண்டும்.

உலக அளவில் உள்ள 193 நாடுகளில் மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நாடு இந்தியா, உலக அளவில் 1.46 பில்லியன் மக்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள். அந்த வகையில் உலக அளவில் அதிக இளைஞர்கள் கொண்ட நாடு இந்தியாவாகும்,இளைஞர்களின் சக்தியால் நம் இந்திய தேசமானது உலக அளவில் தலை நிமிர்ந்து நிற்கும் என்று அக்னிச் சிறகை விரித்து அகிலத்தை அண்ணாந்து பார்க்க வைத்த அப்துல்கலாம் ஐயா அவர்கள் கனவு கண்டார், அப்துல் கலாம் அய்யா அவர்களின் கனவு நனவாக இன்றைய இளைஞர்கள் முற்பட வேண்டும்.

அந்த வகையில் இன்றைய இளைஞர்களின் மனதில் நம்பிக்கையை விதைக்க வேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன் ஆகிய நான் அறம் செய்ய விரும்பு என்கின்ற தலைப்பில் கட்டுரையை நான் எழுதுகிறேன், மேலும் மாதம் தோறும் நான் எழுதுகின்ற இந்த சிந்தனை தொடரானது சமூகத்தின் மேன்மைக்கு என்னால் முடிந்த சிறு முயற்சியே ஆகும்.

தமிழகத்தின் முன்னாள் அரசவைக் கவிஞரான புலமைப்பித்தன் அவர்கள் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் எம்ஜிஆர் அவர்களுக்கு கருத்தாழம் மிக்க எத்தனையோ பாடல்களை எழுதியுள்ளார்..அதில் 1973 ஆம் ஆண்டு வெளிவந்த உலகம் சுற்றும் வாலிபன் என்கின்ற திரைப்படத்தில் சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்கின்ற பாடலை எழுதியிருப்பார்.....அப்பாடலில் உள்ள சரணத்தில் அன்பில் வாழும் இதயம் தன்னை தெய்வம் கண்டால் வணங்கும், ஆசையில்லா மனிதர் தம்மை துன்பம் எங்கே நெருங்கும் என்று எழுதியிருப்பார்....

உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்கின்ற அற்புதமான கருத்தை, வாழ்வியல் அறத்தை மேற்காணும் பாடலை மெய்ப்பிக்கும் வகையில் அண்மையில் சென்னையில் உலகமே கண்டு வியக்கும் வகையில் சமூக வலைதளங்களில் பார்க்கப்படும், பகிரப்படும், போற்றப்படும், ஒரு நிகழ்வாக சென்னையில், தி.நகர் பகுதியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரியும் பத்மா என்கின்ற அம்மையார் பணியில் இருந்தபோது சாலையோரம் கிடந்த பையில் இருந்த சுமார் 45 சவரன் தங்க நகைகளை கண்டெடுத்து, அதை நேர்மையுடன் மீட்டு, காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். அவரின் நற்செயலை பாராட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் ரூபாய் ஒரு லட்ச ரூபாய் பரிசுத் தொகை கொடுத்து ஊக்கம் கொடுத்து பாராட்டினார், அதனைத் தொடர்ந்து பல்வேறு தரப்பினர் அவருக்கு வாழ்த்து மழை பொழிந்து வருகிறார்கள், அவரது இல்லம் தேடி சென்று பாராட்டி வருகிறார்கள், அதனைத் தொடர்ந்து இந்த உயரிய நேர்மைக்காகப் பாராட்டப்பட்ட அவருக்கு, நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தங்கச் சங்கிலி பரிசளித்தார். மேலும், பத்மாவின் நேர்மையைப் போற்றும் வகையில் இந்திய அஞ்சல் துறையானது அவருக்குத் தபால் தலை வெளியிட்டு அவரது புகழை மேலும் வானளவு உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மேலும் ஆனந்த விகடன் பத்திரிக்கையில் அவர் அளித்த பேட்டியில் சுய சம்பாத்தியத்துல போட்டுருக்க இந்த மஞ்சக் கயிறு போதும் எனக்கு, நான் 20 வருஷமா தூய்மைப் பணியாளரா வேலை செய்றேன். நிறைய பேர் எங்களுக்கு சாப்பாடு தருவாங்க. சிலர் எங்க கையில கொடுக்க சங்கடப்பட்டுகிட்டு ரோட்டுல ஓரமாவெச்சுட்டுப் போவாங்க. அன்னைக்கும் ஒரு பை அப்படித்தான் இருந்துச்சு. சாப்பாடு இருக்குனு நினைச்சு அந்தப் பையை நான் எடுத்துட்டு கிளம்பிட்டேன். ஆட்டோல ஏறி பார்த்தேன். பை முழுக்க நகை இருந்துச்சு. நேரா எங்க ஆபிஸரைப் பார்த்தேன். அவங்க போலீஸ்கிட்ட கூட்டிட்டுப் போனாங்க. நகையை பறி கொடுத்தவங்களும் அங்க வந்திருந்தாங்க. நகையை அவங்ககிட்ட ஒப்படைச்சுட்டேன். அது நான் சம்பாதிக்கல. சம்பாதிச்சவங்க மனசு எவ்வளவு தவிச்சிருக்கும். அடுத்தவங்க சம்பாதிச்ச அந்த நகையை நான் வெச்சி என்ன பண்ணப்போறேன். சுய சம்பாத்தியத்துல போட்டுருக்க இந்த மஞ்சக் கயிறு போதும் எனக்கு. நேர்மைதான் நம்ம சம்பாத்தியம். இவ்வாறு தான் கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் பத்மா கூறினார்.

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா , எந்த நேரமும் சண்டை ஓயாத முரட்டு உலகமடா , விதவிதமான பொய்களை வைத்துப் புரட்டும் உலகமடா ,சிலர் குணமும் இதுபோல் குறுகிப்போகும் கிறுக்கு உலகமடா என்று மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் இன்றைய சமூகத்தை அன்றைக்கே தோலுரித்துக் காட்டினார்..

அட்டைப்பூச்சி போல அடுத்தவன் உழைப்பை உறிஞ்சி வாழும் இன்றைய காலகட்டத்தில் அதாவது கலியுகத்தில் இப்படிப்பட்ட ஒரு பொன்மனம் கொண்ட பெண்மணியின் செயல் அனைவரும் நேர்மையாக இருக்க வேண்டும் என்ற ஒரு புரட்சியை உண்டாக்கி இருக்கிறது. அவரைத் தொடர்ந்து இன்று பல்வேறு தரப்பினர் பிறர் பொருட்களை நேர்மையாக காவல் நிலையத்தில் ஆங்காங்கு ஒப்படைத்து வருகிறார்கள். பணம் சம்பாதிக்க ஆசைப்படாமல் நல்ல பேரை சம்பாதிக்க ஆசைப்படும் இது போன்ற மனிதர்களால் தான் நாட்டில் மழை பெய்கிறது என்றார் ஐயன் திருவள்ளுவர்...

தூய்மைப் பணியாளர் என்றாலே ஒரு அருவருப்பாக பார்க்கும் இன்றைய காலகட்டத்தில் தனது சிறப்பான செயல்பாட்டால் ஒட்டுமொத்த தூய்மை பணியாளர்களுக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் பத்மா என்கின்ற நேர்மையின் ஆத்மா, இச்சமூகத்தின் மன அழுக்கை போக்க வந்த தூய்மை பணியாளராக திகழ்கிறார், அவரது நற்பணிக்கு இந்த கட்டுரை வாயிலாக வாழ்த்து சொன்னால் போதாது எந்தப் பணியாக இருந்தாலும் அந்தப் பணியில் நேர்மையாக நேர்த்தியாக செயல்பட்டால் சாதாரண ஒருவரும் செலிபிரிட்டி ஆகலாம் என்பதற்கு தி.நகர் பத்மா அம்மையார் திகழ்கிறார். சமூகப் புரட்சிக்கு வித்திட்ட அவருக்கு சமூகப்பற்றாளனாக நான் எனது இதயபூர்வமான மனமார்ந்த வாழ்த்துக்களை பாராட்டுகளை நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தி.நகர் பத்மா அம்மையாரை போல அறம் செய்ய விரும்புவோம் அனைவரின் இதயத்தில் இடம் பிடிப்போம்.

(சிந்தனைத் தொடரும்)



**பெ. மணிமாறன்**
சமூகப்பற்றாளன்
ஞானச்சித்தன்,
ஆம்பூர் போக்குவரத்து
காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் மாவட்டம்.




# 20 ஆண்டு பகை‘ - என்கவுன்டரில் கொல்லப்பட்ட அழகுராஜா யார்? திருச்சி ஐஜி. பாலகிருஷ்ணன் விளக்கம்...

**பெரம்பலூர் அருகே போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குற்ற வழக்குகளில் தொடர்புடைய அழகுராஜா உயிரிழந்துவிட்டதாக, ஜனவரி 27 ஆம் தேதியன்று திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

முன்னதாக, நீதிமன்ற விசாரணை முடிந்து சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வெள்ளைக்காளி என்ற நபர் மீது சிலர் நாட்டு வெடிகுண்டுகளை வீசியதில் காவலர் ஒருவர் படுகாயம் அடைந்தார். அதன் தொடர்ச்சியாக இந்த என்கவுன்டர் நடந்துள்ளது.மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளைக்காளி மீது கொலை முயற்சி, போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவரை, ஒரு வழக்கு விசாரணைக்காக கடந்த 23-ஆம் தேதியன்று திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். தாக்குதல் நடத்திய கும்பல் காரில் தப்பியோடிவிட்டது என்கிறது காவல்துறை உணவருந்தும்போது வெடிகுண்டு வீசி தாக்குதல்‘ நீதிமன்றப் பணிகள் முடிந்த பிறகு சென்னை புழல் சிறையில் அவரை அடைப்பதற்காக துப்பாக்கி ஏந்திய போலீசார் அழைத்துச் சென்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையின் அருகே ஓர் உணவகத்தில் உணவருந்த சென்றுள்ளனர்.மதிய உணவு அருந்திக் கொண்டிருந்த நேரத்தில் வெள்ளைக்காளியை தாக்குவதற்காக அவர் மீது சிலர் நாட்டு வெடிகுண்டுகளை வீசியுள்ளனர்’ என்கிறார், திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி பாலகிருஷ்ணன்.இந்தச் சம்பவத்தில் காவலர் ஒருவருக்கு படுகாயம் ஏற்பட்டதாக செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.
அப்போது உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுட்டதால் தாக்குதல் நடத்திய கும்பல் தப்பியோடிவிட்டது என்கிறது காவல்துறை.


**ஐ.ஜி பாலகிருஷ்ணன்**

அழகுராஜா கொல்லப்பட்டது ஏன்? ஐ.ஜி விளக்கம் இந்த குற்றத்தில் ஈடுபட்ட நபர்களைப் பிடிப்பதற்கு ஐந்து தனிப்படைகள் அமைக்கப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ள ஐ.ஜி பாலகிருஷ்ணன், 'ஊட்டியில் வைத்து கொட்டு ராஜா என்ற அழகுராஜாவை தனிப்படை போலீஸ் கைது செய்தது. இவர் மீது ஐந்துக்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. அதில் மூன்று கொலை வழக்குகள் உள்ளன' என்கிறார்.



அழகுராஜாவுடன் சேர்த்து மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் பெரம்பலூர் திருமாந்துறை சுங்கச்சாவடி அருகே ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளதாகக் கூறியதாக செய்தியாளர் சந்திப்பில் ஐ.ஜி. பாலகிருஷ்ணன் தெரிவித்தார். 'ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ள இடத்தைக் காண்பிக்குமாறு அப்பகுதிக்கு அழகுராஜாவை காவல்துறையினர் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்த நாட்டு வெடிகுண்டை திடீரென காவலர்கள் மீது வீசியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காவல் வாகனத்துக்கு சேதம் ஏற்பட்டது. அப்போது எஸ்.ஐ ஒருவர் அழகுராஜாவை பிடிக்க முற்பட்டபோது அவர் கையில் காயம் ஏற்பட்டது. அப்போது தற்காப்புக்காக காவல் ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டதில் அழகுராஜா தலையில் காயம் ஏற்பட்டது' எனக் கூறியுள்ளார் பாலகிருஷ்ணன். அவரை அங்கிருந்து காவல் வாகனத்திலேயே அரசு மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றதாகவும் ஆனால் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் பாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.



மோதல் தொடங்கிய பின்னணி காவல்துறை கூற்றுப்படி, ராமநாதபுரம் மாவட்டம், கமுதியை பூர்வீகமாகக் கொண்ட வி.கே.குருசாமி, ராஜபாண்டி ஆகியோர் அடிப்படையில் உறவினர்களாக உள்ளனர். இவர்கள் மதுரைக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் தி.மு.கவில் வி.கே.குருசாமியும் அ.தி.மு.கவில் ராஜபாண்டியும் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வந்தனர். 2003-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின்போது சுவரொட்டி ஒட்டுவதில் ஏற்பட்ட சிறு மோதலால் இருவர் இடையே பகை ஏற்பட்டது.இந்த மோதலின் தொடர்ச்சியாக இருதரப்பின் நபர்களும் பழிக்கு பழியாக கொல்லப்பட்டனர்
இதுவரை 17 பேர் கொலை 2003-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மோதலின் விளைவாக இரு தரப்பிலும் தற்போது வரை சுமார் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக ராஜபாண்டியின் ஆதரவாளரான வெள்ளைக்காளி கைது செய்யப்பட்டார். அவரைக் கொல்வதற்கு குருசாமியின் உறவினரான அழகுராஜா முயன்றுள்ளார். இதன் தொடர்ச்சியாக காவல்துறை சுட்டதில் அழகுராஜா உயிரிழந்தார். அரசியல்ரீதியாக ஏற்பட்ட பகை, பல்வேறு கொலைகளுக்கு காரணமாக மாறியது. இரு தரப்பிலும் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இரு தரப்புக்கு இடையே தொடர்ந்து கொண்டிருக்கும் மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும்." என்கிறார் சிறைக் கைதிகள் உரிமை மையத்தின் இயக்குநரும், மனித உரிமை ஆர்வலருமான வழக்கறிஞர் புகழேந்தி.

# கரூர் மாவட்ட காவல்துறை,

















கரூர் மாவட்டத்தில் காணாமல்போன ரூ.25,00,000/- (இருபத்தைந்து லட்சம்) மதிப்புள்ள 136 செல்போன்களை **CEIR APP** மூலம் கண்டறிந்தும், மேலும் சைபர் குற்றங்களால் பணத்தை இழந்த 15 நபர்களின் இழந்த பணம் ரூபாய் 97,33,543/- மீட்கப்பட்டு (03.02.2026) அன்று கரூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட நபர்களை நேரில் வரவழைத்து செல்போன் மற்றும் பணத்தை உரிய நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் செல்போன்களை தவற விட்டாலோ அல்லது காணாமல் போனாலோ உடனடியாக சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு நேரில் அல்லது இணையத்தில் (**https://eservices.tnpolice.gov.in/**) புகார் அளிக்கலாம் எனவும், சைபர் குற்றங்களால் பாதிக்கப்பட்டால் உடனடியாக 1930 என்ற இலவச தொலைபேசி எண்ணின் வாயிலாகவும் மற்றும் **www.cybercrime.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாகவும் புகார் பதிவு செய்யலாம் எனவும், மேலும் சைபர் குற்றங்கங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சைபர் கிரைம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. **T.** பிரபாகரன் அவர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.**T.** பரிமளாதேவி ஆகியோர் கலந்துகொண்டனர்.







தமிழக சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் காவல் தலைமை இயக்குனர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்ட காவலர்களுக்கான தொடர் மறுசீரமைப்பு முகாம் (02.02.2026) அன்று முதல் தொடங்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களிடம் கண்ணியமாக நடப்பது மற்றும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து நேரடியாகப் பயிற்சி அளித்தார்.

---



## சுய சம்பாத்தியத்துல போட்டுருக்க இந்த மஞ்சக் கயிறு போதும் எனக்கு...

நான் 20 வருஷமா தூய்மைப் பணியாளரா வேலை செய்றேன். நிறைய பேர் எங்களுக்கு சாப்பாடு தருவாங்க. சிலர் எங்க கையில கொடுக்க சங்கடப்பட்டுகிட்டு ரோட்டுல ஓரமா வெச்சுட்டுப் போவாங்க. அன்னைக்கும் ஒரு பை அப்படித்தான் இருந்துச்சு. சாப்பாடு இருக்குனு நினைச்சு அந்தப் பையை நான் எடுத்துட்டு கிளம்பிட்டேன். ஆட்டோல ஏறி பார்த்தேன். பை முழுக்க நகை இருந்துச்சு. நேரா எங்க ஆபிஸரைப் பார்த்தேன். அவங்க போலீஸ்கிட்ட கூட்டிட்டுப் போனாங்க. நகையை பறி கொடுத்தவங்களும் அங்க வந்திருந்தாங்க. நகையை அவங்ககிட்ட ஒப்படைச்சுட்டேன். அது நான் சம்பாதிக்கல. சம்பாதிச்சவங்க மனசு எவ்வளவு தவிச்சிருக்கும். அடுத்தவங்க சம்பாதிச்ச அந்த நகையை நான் வெச்சி என்ன பண்ணப்போறேன். சுய சம்பாத்தியத்துல போட்டுருக்க இந்த மஞ்சக் கயிறு போதும் எனக்கு. நேர்மைதான் நம்ம சம்பாத்தியம்.

**தான் கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த**

## தூய்மைப் பணியாளர் பத்மா







# நாமக்கல் மாவட்ட காவல்துறைக்கு பெருமை சேர்த்த வீராங்கனை




கேரளா மாநிலம் திருவனந்தபுரம் சந்திரசேகரன் நாயர் ஸ்டேடியம் & பல்கலைக்கழக ஸ்டேடியத்தில் நடைபெற்ற 46-வது தேசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் 2026 போட்டிகளில், நாமக்கல் மாவட்ட காவல்துறையைச் சேர்ந்த பெண் தலைமை காவலர் திருமதி. அருள்மொழி அவர்கள், **Masters 45+ Women** 4 × 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் பிரிவில் பங்கேற்று, 1:03.27 விநாடிகள் என்ற சிறப்பான நேரத்தில் ஓட்டத்தை நிறைவு செய்து, தேசிய அளவில் இரண்டாம் இடம் பெற்று மாவட்ட காவல்துறைக்கு மிகுந்த பெருமை சேர்த்துள்ளார். பணியிலும், விளையாட்டிலும் தன்னம்பிக்கை, கட்டுப்பாடு, விடாமுயற்சி ஆகியவற்றின் மூலம் சாதனை படைக்க முடியும் என்பதற்கு திருமதி. அருள்மொழி அவர்கள் ஒரு சிறந்த முன்மாதிரி. அவரின் இந்த வெற்றி காவல்துறையினருக்கும், பெண்களுக்கும், இளம் தலைமுறையினருக்கும் பெரும் ஊக்கமாக திகழ்கிறது. (03.02.2026) அன்று நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. சு. விமலா, இ.கா.ப., அவர்களை நேரில் சந்தித்து, அவரின் சாதனைக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பெற்றார்.

---

## விடாமுயற்சி



விடாமுயற்சி விண்ணையும் விலை பேசும்
விடியாத பொழுதுகூட விடியலை தேடும்

அறிவும் தன்னம்பிக்கையும் அருகருகே நிற்கும்
அலைச்சலும் தேடலும்
அடைவதை சொல்லும்

தடைகளும் தடங்களும்
விடைகளை கொடுக்கும்
தன்னிறைவு தந்துவிட்டு விடாமுயற்சி விடைபெறும்

**சி.சுபாஷ் சந்திர போஸ்**
**(காவல்துணை கண்காணிப்பாளர் ஓய்வு)**



# அமைச்சரின் சுய லாபத்திற்காக முத்திரையர் சங்கங்களிடையே பிரிவினையை உருவாக்கி வருகிறார் ...

**சுய லாபத்திற்காக முத்திரையர் சங்க அமைப்புகளுக்கு இடையே பிரிவினையை உருவாக்கி வருகிறார் அமைச்சர் மெய்யநாதன் அகில இந்திய முத்தரையர் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் பகிரங்க குற்றச்சாட்டு**

அகில இந்திய முத்தரையர் சங்க பொதுச் செயலாளர் எஸ் எம் மூர்த்தி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவரிடம் முத்திரையர்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் அரசியலில் முக்கியத்துவம் எந்த அளவுக்கு உள்ளது என்பது பற்றி கேட்ட பொழுது அவர் கூறுகையில்

முத்திரையர் சமுதாய மக்கள் அகில இந்திய அளவில் உள்ளனர். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் பரவலாக அதிக எண்ணிக்கையில் உள்ளனர். முத்தரையர் சமுதாய மக்களில் பெரும்பாலானோர் வாழ்க்கை தரத்திலும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு திமுக அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளும் அந்தந்த கட்சிகள் ஆட்சி அமைக்கும் காலகட்டத்தில் முத்தரையர் சமுதாய மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கி அதில் வெற்றி பெறும் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கி வருவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தற்போது திமுக தலைமையிலான அரசில் தமிழக முதல்வர் ஸ்டாலின் முத்தரையர் சமுதாயத்தைச் சேர்ந்த மெய்ய நாதனுக்கு அமைச்சர் பதவி வழங்கியுள்ளார்.



மெய்ய நாதனை பொறுத்தவரை கடந்த காலங்களில் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த பொழுதே விளையாட்டு துறையில் முத்தரையர் சமுதாய இளைஞர்களை ஊக்குவிக்கவோ விளையாட்டு துறையில் அவர்களை சாதிக்க வைக்கவோ அவர்களுக்கு தேவையான வழிமுறைகளை செய்யவில்லை. அதேபோல

தற்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக மெய்ய நாதன் இருக்கும் பட்சத்தில் முத்திரையர் சமுதாய மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து வரும் நிலையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முத்தரையருக்கு இணையான எண்ணிக்கையில் உள்ள வன்னியர் சமுதாய மக்கள் இந்த இட ஒதுக்கீடு சலுகைகளை அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ளும் நிலையில் முத்திரையர் சமுதாய மக்களுக்கு எந்த சலுகைகளும் சென்றடையும் வகையில் அமைச்சர் மெய்ய நாதன் நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளவில்லை. இதனால் முத்தரையர் சமுதாய மக்கள் பெரும் அதிருப்தியில் உள்ளனர். வாழ்க்கை தரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள முத்தரையர் சமுதாய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு திமுக தலைமை மெய்ய நாதனுக்கு அமைச்சர் பதவி வழங்கிய நிலையில் எந்த நோக்கத்திற்காக மெய்யநாதனுக்கு அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டதோ அதற்கு மாறாக முத்தரையர் சமுதாய மக்களுக்கு பல்வேறு இடையூறுகளை தான் அமைச்சர் செய்து வருகிறார். அதற்கு உதாரணமாக முத்தரையர் சமுதாய அமைப்புகளுக்கிடையே பல்வேறு பிரிவினைகளை உண்டாக்கி அவர்களிடையே மோதல் போக்கை ஏற்படுத்தி வருகிறார். அத்தோடு முத்தரையர் சமுதாய மக்கள் அனைவரும் தன் பின்னால் இருப்பதாக காட்டிக் கொள்வதற்காக முத்தரையர் சங்கங்களில் பல முன்னணி அமைப்புகள் உள்ள நிலையில் ஒரே ஒரு அமைப்பை மட்டும் இவரது சுயநலத்திற்காக அழைத்துச் சென்று அந்த அமைப்பை திமுகவுக்கு ஆதரவு கொடுக்கச் சொல்லி ஒட்டுமொத்த முத்தரையர் சங்க அமைப்புகளையும் தான் ஒருங்கிணைத்து விட்டதாக திமுக தலைமை இடம் காட்டிக் கொண்டு திமுக தலைமையையும் ஏமாற்றி வருகிறார். இவர் தன்னை உருவாக்கி விட்ட கட்சி தலைமைக்கும், அதே போல தான் வெற்றி பெற்று எம்எல்ஏவாக அமைச்சராக உருவாவதற்கு காரணமாக இருந்து வாக்களித்த முத்தரையர் சமுதாய மக்களுக்கும் துரோகத்தை செய்து வருகிறார். மீண்டும் இவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கும் பட்சத்தில் இவருக்கு வாக்களிக்க முத்தரையர் சமுதாய மக்கள் நிச்சயம் விரும்ப மாட்டார்கள் என்பதே உண்மை என்றார்.

# சபாஷ் புதுக்கோட்டை மாநகர காவல்துறை!



புதுக்கோட்டையில் காவலர் வீட்டில் திருடப்பட்ட 35 சவரன் நகைகளை மீட்டு திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட வட மாநில பெண்ணையும் 48 மணி நேரத்தில் கைது செய்த புதுக்கோட்டை நகர காவல்துறையினர்!


SGN
MEDIAWORKS
All Your Media Needs Under One Roof
Your Complete Media Solution
DTP & Design
YouTube Management
DTP & Design
YouTube Management
Website Management
Voice Over Services
News & Media
For More Details :
89400 86822

# வேளைச்சேரி குற்றபிரிவு போலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 24 ¾ சவரன் தங்க நகைகள் மீட்பு. வேலைக்கார பெண்மணி கைது.



Guna- J-7 X PS accused

சென்னை, வேளச்சேரி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் ராஜேஷ், வ/52 என்பவர் **TVS Credit Services** என்ற தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவர் நேற்று (30.01.2026) வீட்டின் பீரோவில் வைத்திருந்த தங்க நகைகளை சரிபார்த்தபோது, சுமார் 24 ¾ சவரன் எடையுள்ள தங்கசங்கிலிகள், நெக்லஸ் உள்ளிட்ட தங்க நகைகளை காணவில்லை எனவும், வேலைக்கார பெண் குணா என்பவர் மீது சந்தேகம் உள்ளதாகவும், தகுந்த நடவடிக்கை எடுத்து தனது தங்க நகைகளை கண்டுப்பிடித்து தரும்படியும், ராஜேஷ் என்பவர் J-7 வேளச்சேரி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

J-7 வேளச்சேரி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தங்கராஜ், துணை ஆய்வாளர் ஜம்புலிங்கம், பெண் தலைமை காவலர் ராஜலஷ்மி, பெண் காவலர் லட்சுமி, முதல்நிலை காவலர் பாலமுருகன்,தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்ததில், மேற்படி வேலைக்கார பெண்மணி குணா புகார்தாரர் வீட்டில் சிறிது சிறிதாக தங்க நகைகளை திருடிச் சென்று அடகு வைத்துள்ளது தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் மேற்படி திருட்டில் ஈடுபட்ட குணா, பெ/50, க/பெ.ரவி, பாலாஜி நகர், பள்ளிக்கரணை, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 24 ¾ சவரன் எடை கொண்ட தங்க நகைகள் அடகு கடையிலிருந்து மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி குணா விசாரணைக்குப் பின்னர் (30.01.2026) அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

---

# ஆழ்வார்குறிச்சி பகுதியில் வீடுகளில் தொடர் திருட்டில் ஈடுபட்ட மூன்று எதிரிகள் கைது

தென்காசி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய சரகம் பொட்டல்புதூர் பகுதியில் கடந்த 09.01.26 அன்று பூட்டியிருந்த நான்கு வீடுகளில் தொடர்ச்சியாக அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் தங்கம், வெள்ளி மற்றும் பணம் ஆகியவற்றை திருடி சென்றதாக பாதிக்கப்பட்ட நபர்கள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.S.மாதவன் T.P.S., அவர்களின் உத்தரவின் பேரில் ஆழ்வார்குறிச்சி காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு குற்றவாளிகளை பல்வேறு கோணங்களில் தீவிரமாக தேடிவந்தனர். 320 க்கும் மேற்பட்ட **CCTV** காட்சிகளை ஆராய்ந்து வள்ளியூரை சேர்ந்த சிவலிங்கம்(40), செட்டிகுளத்தைச் சேர்ந்த சிவகுமார்(42), மற்றும் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த சுரேஷ்(27) ஆகியோரை கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் மேற்படி நபர்கள் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது, அவர்களிடமிருந்து திருடப்பட்ட 157 கிராம் தங்கம், 874கிராம் வெள்ளி மற்றும் பணம் ரூபாய் 15,000 பறிமுதல் செய்யப்பட்டு மேற்படி மூன்று நபர்களும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மேற்படி கைதுசெய்யப்பட்ட சுரேஷ் என்பவருக்கு தருமபுரி, திருப்பூர் ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 28 திருட்டு வழக்குகளும், சிவலிங்கம் என்பவருக்கு தென்காசி, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 11 திருட்டு வழக்குகளும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எதிரிகளை கைது செய்து வழக்கின் சொத்துக்களை பறிமுதல் செய்த காவல்துறையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.






# டெலிகிராம் மூலம் சுமார் 6 லட்சம் ஏமாற்றிய ஆறு எதிரிகள் கைது.

தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர், ஆன்லைனில் போலியான டெலிகிராம் ஐடி மற்றும் போலியான வெப்சைட் ஆகியவற்றை உருவாக்கி காயின் பிட்டிங் டாஸ்க் ( **Old Coin Purchase Task**) செய்தால் லாபம் கிடைக்கும் என்று கூறி முதலீடு செய்ய வைத்து போலியாக வாலட்டில் பணம் வரவு வைக்கப்பட்டதாக ரூ.5,83,007 பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்றியது தொடர்பாக, தென்காசி மாவட்ட சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், எதிரிகள் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருப்பது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து, தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு **G.S.**மாதவன்**T.P.S.**, அவர்களின் அறிவுறுத்தலின்படி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜீலியஸ் சீசர் அவர்களின் தலைமையில், காவல் ஆய்வாளர் திருமதி.வசந்தி மற்றும் சைபர் குற்றப்பிரிவு காவலர்கள் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்று, மேற்படி குற்றங்களில் ஈடுபட்ட ஆறு எதிரிகள் கைது செய்து அவர்களிடமிருந்து 10 மொபைல் போன்கள், 33 சிம் கார்டுகள், 44 வங்கி கணக்கு விவரங்கள், 68 ஏடிஎம் கார்டுகள், 13 செக் புத்தகங்கள், 2 லேப்டாப்கள் மற்றும் 1 மெமரி கார்டு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்படி எதிரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர்கள் அனைவரும் பொறியியல் பட்டதாரிகள் என்பதும் சிங்கப்பூரில் இதற்கு முன்பு பணியாற்றியிருப்பதாகவும், நாளிதழில் பணியாற்றி வருவதாகவும் குறைந்த காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையில் தாங்கள் பெற்ற பொறியியல் அறிவை சைபர் குற்றச் செயல்களில் தவறாக பயன்படுத்தலாம் என எண்ணி இந்த குற்றங்களில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது. எதிரிகள் **Donepay**, **Showpay**, **Hoyopay an Havipay** போன்ற **App**-களை பயன்படுத்தியும், எதிரிகள் பணியாற்றி வந்த சிம் கார்டு விற்பனை பணியின் மூலம் பழக்கமான நபர்களிடம் வங்கி கணக்குகளை திறந்து தருமாறு கூறியும், சிவகங்கை, பரமக்குடி, காளையார்கோவில் சுற்று வட்டார பகுதிகளிலுள்ள பல்வேறு நபர்களை பணம் தருவதாக கூறி ஏமாற்றி வங்கி கணக்குகளை பெற்றுக் கொண்டும், அந்த வங்கி கணக்குகளை சைபர் மோசடி குற்றங்களில் ஏமாற்றி பெறப்படும் பணத்தை பெற பயன்படுத்தி வந்துள்ளனர். மேலும் எதிரிகள் இவ்வாறு செயல்பட்டால் தாங்கள் சிக்கமாட்டோம் என்ற தவறான எண்ணத்தில் அவர்கள் செயல்பட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வங்கி கணக்கு விவரங்களை ஆய்வு செய்ததில், எதிரிகளுக்கு தமிழ்நாட்டின் பல்வேறு சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களிலும், இந்தியா முழுவதிலுள்ள பல மாநில சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களிலும் 100-க்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பது தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து, எதிரிகள் மீது உரிய நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களின் வங்கி கணக்கு விவரங்கள் தொடர்பாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாநில சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமிஷன் கிடைக்கும் என்ற ஆசையில் வங்கி கணக்கு விவரங்களை ஏஜென்ட்களிடம் வழங்கும் நபர்களும் குற்றவாளியாவார்கள். தங்களது வங்கி கணக்கு, **ATM** விவரங்கள் **OTP**, **KYC** போன்ற முக்கியமான விவரங்களை யாரிடமும் பகிர வேண்டாம் என்றும், ஆன்லைன் வேலை வாய்ப்புகள், இணையவழி பங்குச்சந்தை முதலீடுகள், இணையவழி கடன்கள், டிஜிட்டல் அரெஸ்ட் செய்துள்ளதாக ஏமாற்றும் நபர்கள், **Scholarship** பணம் தருவதாக ஏமாற்றும் நபர்கள், ஆன்லைனில் குறைந்த விலைக்கு பொருள்கள் தருவதாக தருவதாக ஏமாற்றும் நபர்கள், **WhatsApp APK files** (**RTO Challan,SBI**) தொடர்பாக மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு தென்காசி மாவட்ட காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.



# ஸ்ரீ காமாட்சி மத்துவ மனையின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா



1.2.2026, தஞ்சாவூர் ஸ்ரீ காமாட்சி மருத்துவமனையின் 3-ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் உணவுத்துறை அமைச்சர் திரு.R.காமராஜ் MLA அவர்கள், சிறப்பு விருந்தினர் மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி திரு R.மகாதேவன் அவர்கள், மருத்துவர் திரு.K.இனியன் அவர்கள், மருத்துவர் திரு.K.இன்பன் ஆகியோரை வாழ்த்திய போது. உடன் மாநில பொதுச்செயலாளர் திரு.S.தினகரன் அவர்கள், திருவாரூர் வடக்கு மாவட்ட தலைவர் திரு.A.முரளிதரன் அவர்கள் மற்றும் மண்டல, மாவட்ட, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# சைதாப்பேட்டை பகுதியில் கல்லூரி மாணவர்களை மிரட்டி பணம் பறித்துச் சென்ற வழக்கில் சகோதரர்கள் இருவர் கைது.

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பரத், வ/20, என்பவர் சென்னை, சைதாப்பேட்டை பகுதியிலுள்ள கல்லூரியில் இளங்கலை படித்துக் கொண்டு, அரசு மாணவர் விடுதியில் தங்கி வருவதாகவும், கடந்த 31.01.2026 அன்று இரவு, அவரது சொந்த ஊர் செல்வதற்காக அவரது கல்லூரி நண்பருடன், சைதாப்பேட்டை ரயில் நிலையம் எதிரில் உள்ள ஜீனிஸ் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த 4 நபர்கள், மேற்படி பரத் மற்றும் அவரது நண்பரை வழிமறித்து, மது அருந்த பணம் கேட்டுள்ளனர். பரத் பணம் தர மறுக்கவே, 4 நபர்களில் ஒருவர் கீழே கிடந்த பீர் பாட்டிலை எடுத்து உடைத்து, உடைந்த பீர் பாட்டிலை காட்டி மிரட்டி, பரத் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.2,000/-ஐ பறித்துக் கொண்டு, நால்வரும் தப்பிச் சென்றதாகவும், பரத் என்பவர் J-1 சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். J-1 சைதாப்பேட்டை காவல் நிலைய உதவி ஆணையர் சீனிவாசன் மேற்பார்வையில்,ஆய்வாளர் சேட்டு தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் லோகேஷ், வ/24, கோதாமேடு, சைதாப்பேட்டை, சென்னை, மற்றும் இவரது சகோதரர் சந்தோஷ், வ/20, ஆகியோரை (02.02.2026) அன்று கைது செய்தனர். அவர்களிடமிருந்து வழிப்பறி செய்த பணத்தில் செலவு செய்தது போக பணம் ரூ.550/- மீட்கப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி லோகேஷ் என்பவர் J-1 சைதாப்பேட்டை காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 1 கொலைமுயற்சி, வழிப்பறி உட்பட 7 குற்ற வழக்குகளும், மற்றொரு எதிரி சந்தோஷ் மீது 1 கொலைமுயற்சி, வழிப்பறி உட்பட 3 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் (02.02.2025)அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை பிடிக்க காவல் குழுவினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.








# Z System Intelligent Controls Private Limited

system

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS | azbil | TURCK | AR, VR, ER Developement




PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

Temperature Controller, Recorders, Switch, Sensors

Sensors, Connectivity. Interface technology Analysers

## Our Service



Power | Water &Waste water | Metro | SPM | Cement | Metal | Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, [redacted]
Nagar, Tambaram
Chennai-
600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd




# கஞ்சா வழக்கில் தொடர்புடைய நபர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது

திருச்சி மாவட்டம், ராம்ஜி நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பஞ்சு மில் பகுதியில் கடந்த 02.01.2026 அன்று சுமார் 2 கிலோ கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்தது தொடர்பாக புவனேஸ்வரி என்பவர் மீது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்துறையினர் (**Cr.No.**02/26 **U/s** 8(**C**) **r/w** 20(**b**)(**i**)(**B**) **of NDBS Act**) & ஈடுபட்ட புவனேஸ்வரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியிருந்த நிலையில். திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம். இ.கா.ப., அவர்களின் பரிந்துரையின்பேரில் திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் புவனேஸ்வரியை தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

# தொகுப்பூதியம் ரூ.4,000-ல் இருந்து ரூ.5,000ஆக உயர்வு






தமிழக ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.4,000ல் இருந்து ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் 40,419 ஊழியர்கள் பயன்பெறுவார்கள் என அரசாணையில் கூறப்பட்டுள்ளது. ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**



# நோ கமிசன், நோ கலெக்சன் மக்களின் நம்பிக்கையாக நிற்கும் வட்டார வளர்சித்துறை அதிகாரி (B.D.O) பி. கலியபெருமாள் (PK)

**நிர்வாகப் பணியில் அதிகாரம் என்பது மேசை, கையொப்பம், கோப்பு என மட்டும் முடிவதில்லை. அது மக்களின் வாழ்க்கையை நேரடியாகத் தொடும் போது, அந்த அதிகாரி எப்படிப் பணியாற்றுகிறார் என்பதே ஆட்சியின் உண்மையான முகமாக மாறுகிறது. அத்தகைய ஒரு நேர்மையான, மக்களோடு நெருக்கமாக வாழும் அதிகாரியாக விளங்குபவர், அனைவராலும் அன்புடன் PK அழைக்கப்படும் தற்போதைய தஞ்சை மாவட்டம் திருச்சிற்றம்பம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பி. கலியபெருமாள்,**

கல்வி என்பது இவரின் வாழ்க்கையின் அடித்தளம். **M.Sc., B.Ed.**, படித்த இவர், அரசு பணிக்கு முன்பு 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றியவர். அந்த காலகட்டத்தில் அவர் கற்பித்தது பாடங்கள் மட்டும் அல்ல, மாணவர்களின் கனவுகளையும் வழிநடத்தியவர். மருத்துவர், பொறியாளர், உயர்மதிப்புடைய தொழில்களில் இன்று நிற்கும் பலரின் பின்னணியில், **PK** என்ற ஆசிரியரின் அர்ப்பணிப்பு மறைந்திருக்கிறது.அவரது வாழ்க்கைப் பாதை எளிதானது அல்ல. தந்தை திரு. பன்னீர்செல்வம், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றியபோது, பணியின் போதே மறைந்தார். அந்த துயரமான தருணத்துக்குப் பின்னர், கருணை அடிப்படையிலான திட்டத்தின் மூலம் அரசு சேவையில் இணைந்தவர் பி. கலியபெருமாள். தந்தையின் நேர்மை, பொறுப்புணர்வு ஆகியவற்றை தன் வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டே இவர் முன்னேறி இன்று வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற இடத்தை அடைந்திருக்கிரார். முக்கியமாக கலைஞர் கனவு இல்லம் திட்டம் போன்ற முக்கியமான அரசுத் திட்டங்களில், அவர் நிலத்தடி மட்டத்தில் நேரடியாகச் சென்று பணியாற்றுவது அவரது தனிச்சிறப்பு. பயனாளர்களிடமிருந்து ஒரு ரூபாய் கூட லஞ்சம், கமிஷன் அல்லது எந்தப் பெயரிலும் கொள்ளையடிக்கப்படக்கூடாது என்பதில் அவர் காட்டும் கடுமையும், கண்காணிப்பும் மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. அரசுத் திட்டம் மக்களுக்கே என்ற தத்துவத்தை அவர் செயலில் நிரூபிக்கிறார்.அதிகாரி என்ற அகம்பாவம் இல்லாமல், எளிதில் அணுகக்கூடியவர், மக்களுடன் பேசக்கூடியவர் என்பதே **PK**-யின் மற்றொரு பலம். அலுவலகத்திற்குள் மட்டுமல்ல, கிராமங்களிலும், பயனாளர்களின் வீடுகளிலும் அவரை காண முடிகிறது. மக்கள் குறைகளை நேரடியாகக் கேட்டு, உடனடி தீர்வு காண முயலும் அவரது அணுகுமுறை, நிர்வாகத்தில் மனிதநேயத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளது.

ஆசிரியர் மனம் அவரை இன்னும் விட்டுச் செல்லவில்லை. இன்று மாணவர்களுக்குப் பதிலாக, சக ஊழியர்களுக்கு அரசுத் திட்டங்கள், தேர்தல் பணிகள், நிர்வாக பொறுப்புகள் குறித்து பயிற்சி அளித்து, வழிகாட்டுகிறார். அனுபவத்தை பகிர்ந்து, குழுவை வலுப்படுத்தும் இந்தப் பண்பு, ஒரு சிறந்த தலைமைக்கான அடையாளம்.

நீதியின் நுண்ணறிவு சார்பாக, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பி. கலியபெருமாள் **(PK)** அவர்கள், இதே நேர்மை, நேர்த்தி, துணிச்சல் மற்றும் செயல்திறன் கொண்ட பணியாற்றலை தொடர்ந்து, அரசுப் பணியில் மனிதநேயமும், நேர்மையும் இன்னும் உயிருடன் இருக்கிறது என்பதற்கான சாட்சிகளில் ஒருவர் **PK**. மக்களின் நம்பிக்கையின் சின்னமாக நீடிக்க வேண்டும் என மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.


A Journey of 15 Years Geesys in India
Sale - Save - Sustain
GEESYS
கோடை வரும்போது (Voltage)
பிரச்சனைகளும் கூடவே வரும்.
SUPER SALE
Protect your home appliances with a GEESYS Voltage Stabilizer.
TV STABILIZERS
SUITABLE FOR : SMART TVS, SET-TOP BOX, WOOFERS, HOME THEATRES, DVDS
2 YEARS WARRANTY
REFRIGERATOR STABILIZERS
SUITABLE FOR : REFRIGERATOR
2 YEARS WARRANTY
SINGLE BOOSTER STABILIZERS
SUITABLE FOR : WINDOW/SPLIT ACS 1, 1.5 AND 2 TON
3 YEARS WARRANTY
DOUBLE BOOSTER STABILIZERS
SUITABLE FOR : WINDOW/SPLIT ACS 1, 1.5 AND 2 TON
3 YEARS WARRANTY
Follow us
Call Us 9962012354
Mail Us Info@geesysindia.com
Learn more www.geesysindia.com